

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (24.12.2025) முகாம் அலுவலகத்தில், சென்னை மயிலை பேராயர் ஜார்ஜ் அந்தோணிசாமி, சாந்தோம் பேராலயத்தின் அருட்தந்தை வின்செண்ட் சின்னதுரை, அருட்தந்தை தீபக் அந்தோணி ஆகியோர் சந்தித்த போது, அவர்களுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கிறிஸ்துமஸ் வாழ்த்துகளை தெரிவித்தார்.

## முதற்கட்டமாக 1000 ஒப்பந்தச் செவிலியர்களுக்கு பணி நிரந்தரம்!

# அரசின் முடிவை ஏற்று, ஒப்பந்தச் செவிலியர்கள் போராட்டத்தை முடித்துக் கொண்டனர்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் தகவல்!

சென்னை, டிச. 25-

முதற்கட்டமாக 1000 ஒப்பந்த செவிலியர்கள் பணி நிரந்தரம் செய்யப்படுவார்கள், படிப்படியாக மீதமுள்ள ஒப்பந்த செவிலியர்களுக்கு பணி நிரந்தர ஆணைகள் வழங்கப்படும்.

அரசின் முடிவினை ஏற்று, ஒப்பந்த செவிலியர்கள் போராட்டத்தை முடித்துக்கொள்கிறார்கள்.

இது குறித்து அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஒப்பந்த செவிலியர்களின் போராட்டத்தை முடித்து வைத்து வெளியிட்ட அறிக்கை வருமாறு:

மருத்துவ பணியாளர் தேர்வாணையம் மூலம் பணியமர்த்தப்பட்ட ஒப்பந்த செவிலியர்கள் பணிநிரந்தரம் செய்யக் கோரி தொடர் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

மேற்காணும் செவிலியர்களின் போராட்டத்தைத் தொடர்ந்து, மருத்துவம் - மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் ஒப்பந்த செவிலியர் சங்கங்களுடன் 19.12.2025 மற்றும் 22.12.2025 ஆகிய நாட்களில் முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தல்களின் படி பேச்சுவார்த்தை நடத்தினார். இதனைத் தொடர்ந்து, மருத்துவம் - மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் செவிலியர்களின் போராட்டம் குறித்து முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, முதலமைச்சர் அவர்களின் ஆலோசனையின் பேரில் மீண்டும் இன்று 24.12.2025 ஒப்பந்த செவிலியர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தினார்கள்.

இன்று நடைபெற்ற பேச்சுவார்த்தையின் அடிப்படையில் தற்போது ஒப்பந்த செவிலியர்களாக பணிபுரிந்து வரும் செவிலியர்களை நிரந்தர பணியிடத்தில் பணி நியமனம் செய்யும்பொருட்டு, நிலுவையிலுள்ள பதவி



உயர்வுகள் மற்றும் புதிய பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டு, சுமார் 1000-க்கும் மேற்பட்ட ஒப்பந்த செவிலியர்கள் விரைவில் நிரந்தர பணியிடங்களில் பணிநியமனம் செய்யப்படுவார்கள் என தெரிவித்தார்.

கடந்தகால ஆட்சியில் 2015-ஆம் ஆண்டு பணிநியமனம் பெற்ற 6,395 ஒப்பந்த செவிலியர்களில், 1,871 செவிலியர்கள் மட்டுமே 2020-ஆம் ஆண்டு வரை பணிநிரந்தரம் செய்யப்பட்டுள்ளனர். ஆனால், தி.மு.க. ஆட்சி பதவியேற்ற 2021-ஆம் ஆண்டு முதல் கடந்த 4 ½ வருடங்களில் 4,825 ஒப்பந்த செவிலியர்கள் படிப்படியாக பணிநிரந்தரம் செய்யப்பட்டுள்ளனர். கடந்த ஆண்டு (2024) மட்டும் மொத்தம் 1,693 ஒப்பந்த செவிலியர்கள் பணி நிரந்தரம் செய்யப்பட்டுள்ளனர்.

ஒப்பந்த செவிலியர்கள் பணியில் சேரும்போதே அவர்கள் குறைந்தபட்சம் 2 வருடங்கள் பணிபுரிந்து, அதன் பின்னர் ஏற்படும் காலிப் பணியிடங்களுக்கேற்ப அவர்கள் நிரந்தரப் பணியிடங்களில் பணியமர்த்தப்படுவார்கள் என்ற விவரம் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. ஆயினும், இவ்வரசு பதவியேற்றதிலிருந்து எடுக்கப்பட்ட பல்வேறு நடவடிக்கைகளின் மூலம் அதாவது, காலிப்பணியிடங்கள் மட்டுமல்லாது, அவ்வப்போது புதிய பணியிடங்களும் தோற்றுவிக்கப்பட்டு, அதன் மூலம் 4,825 ஒப்பந்த செவிலியர்கள் நிரந்தரப் பணியிடத்தில் பணியமர்த்தப் பட்டுள்ளனர்.

இவைத் தவிர, கடந்த நான்கு ஆண்டுகளில் செவிலியர் பணியிடத்திலிருந்து செவிலியர் கண்காணிப்பாளர் நிலை - 2 இடத்திற்கு 1,998 செவிலியர்களும், செவிலியர் கண்காணிப்பாளர் நிலை - 2 பணியிடத்திலிருந்து செவிலியர் கண்காணிப்பாளர் நிலை - 1 பணியிடத்திற்கு 465 நபர்களுக்கும், செவிலியர் பணியிடத்திலிருந்து செவிலியர் போதகர் நிலை - 2 பணியிடத்திற்கு 62 நபர்களுக்கும் பதவி உயர்வுகள் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், செவிலியர்களின் நலனில் இவ்வரசு மிகவும் கவனம் செலுத்தி வருகிறது. அவர்களின் நலன் கருதி, கீழ்க்காணும் பணிகள் தற்போது நடைபெற்று வருகிறது.

ஒப்பந்த செவிலியர்களுக்கு ஊதியத்துடன் கூடிய மகப்பேறு விடுப்பு

தற்போது, செவிலியர்கள் ஒப்பந்த அடிப்படையில் பணிபுரிவதால், அவர்களுக்கு மகப்பேறு விடுப்பு வழங்கப்படாமல் இருந்து வருகிறது. ஆயினும் மகளிர் நலனில் மிகவும் அக்கறை கொண்டுள்ள இவ்வரசு, ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்பட்ட செவிலியர்களுக்கு ஒன்றிய அரசின் மகப்பேறு சட்டம், 1961-இன் படி ஊதியத்துடன் கூடிய மகப்பேறு விடுப்பு தேசிய நலவாழ்வுக் குழும் வழியாக வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. விரைவில் இதற்கான அரசாணை வெளியிடப்பட உள்ளது.

கோவிட் செவிலியர்களுக்கு பணி ஆணை வழங்குதல்

கொரோனா காலத்தில் தற்காலிகமாக ஒப்பந்த அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்ட 3,260 செவிலியர்களில் பணியில் சேராத 390 பேர் நீங்கலாக, 2146 செவிலியர்களுக்கு பணி நியமனம் வழங்கப்பட்டு, தற்போது பணிபுரிந்து வருகின்றனர். மீதமுள்ள 724 செவிலியர்களுக்கும் விரைவில் பணி நியமனம் வழங்க விரைவான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும், இவ்வரசு பொறுப்பேற்றவுடன், ஒப்பந்த செவிலியர்களுக்கு வழங்கப்பட்டு வந்த மாத ஊதியம் ரூ.14,000/-லிருந்து ரூ.18,000/- ஆக மே-2021 முதல் உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது. இவ்வூதிய உயர்வு ஒருசில ஒப்பந்த செவிலியர்களுக்கு சில நிர்வாக காரணங்களால் பெற இயலாமல் உள்ளனர் என அறிய வருகிறது. அவர்களுக்கு விரைவில் இவ்வூதிய உயர்வுத் தொகை கிடைக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இன்று நடைபெற்ற பேச்சுவார்த்தையில், அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளின் காரணமாக ஒப்பந்த செவிலியர்கள் அரசின் முதற்கட்டமாக 1000 நிரந்தர பணியிடங்களில் ஒப்பந்த செவிலியர்கள் பணிநிரந்தரம் செய்யப்படுவார்கள் என்ற அரசின் முடிவினை ஏற்று, தங்களது போராட்டத்தை முடித்துக் கொள்கிறார்கள் என்ற மகிழ்ச்சியான தகவலை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அறிக்கையின் வாயிலாக தெரிவித்தார்.

## காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் நடைபெறும்

# வாக்குச்சாவடி கூட்டம் - தெருமுனைக் கூட்டங்களில் மூத்த வழக்கறிஞர் பி.வில்சன் பங்கேற்று சிறப்புரை!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் தா.மோ.அன்பரசன் அறிவிப்பு!

சென்னை, டிச. 25-

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள திருப்பெரும்புதூர், பல்லாவரம் ஆகிய 2 சட்டமன்றத் தொகுதியில் நடைபெறும் வாக்குச்சாவடி கூட்டம் - தெருமுனைக் கூட்டங்களில் கழக மூத்த வழக்கறிஞர் - மாநிலங்களவை உறுப்பினர் பி.வில்சன் அவர்கள் சட்டமன்றத் தேர்தல் பணிகள் சம்மந்தமாக ஆலோசனைகள் வழங்கி தெருமுனைக் கூட்டத்தில் திராவிட மாடல் அரசின் சாதனைகளை விளக்கி சிறப்புரை ஆற்றுகிறார் என்று மாவட்டச் செயலாளர் அமைச்சர் தா.மோ.அன்பரசன் அறிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை:

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள திருப்பெரும்புதூர், பல்லாவரம், ஆகிய 2 சட்டமன்றத் தொகுதிகளில் அங்கியுள்ள கீழ்க்கண்ட வாக்குச்சாவடிகளில் நடைபெறும், வாக்குச்சாவடி கூட்டத்தில் பங்கேற்று மூத்த வழக்கறிஞர் - மாநிலங்களவை உறுப்பினர் பி.வில்சன் அவர்கள் ஆலோசனைகளை வழங்கு



கிறார்.

அக்கூட்டத்திற்கு பின்னர், அந்த இடங்களில் நடைபெறும் தெருமுனைக் கூட்டத்தில் பங்கேற்று, மக்களுக்கு திராவிட மாடல் அரசின் அரும்பெரும் சாதனைகளை விளக்கிக்கூறி அவர் சிறப்புரை ஆற்றுகிறார்.

இதுபற்றிய விவரம் வருமாறு :-

**திருப்பெரும்புதூர் தொகுதி**
**26.12.2025**

1. 26.12.2025 வெள்ளிக்கிழமை காலை - 9.00 மணிக்கு திருப்பெரும்புதூர் வடக்கு ஒன்றியம் - சந்தவேலூர் ஊராட்சி, பாகம் எண்-42. 2. காலை - 10.30 மணிக்கு திருப்பெரும்புதூர் தெற்கு ஒன்றியம் - எச்சூர் ஊராட்சி, பாகம் எண்-46. 3. பகல் - 12.00 மணிக்கு குன்றத்தூர் தெற்கு ஒன்றியம், சாலமங்கலம் ஊராட்சி, பாகம் எண்-330.

1. 26.12.2025 வெள்ளிக்கிழமை மாலை - 4.00 மணிக்கு குன்றத்தூர் நகரம்-12 -வது வார்டு பாகம் எண்-12. 2. மாலை - 5.00 மணிக்கு மாங்காடு நகரம் - 20- வது வார்டு பாகம் எண்-20. 3. மாலை - 6.00 மணிக்கு மாங்காடு நகரம் பாகம் எண்-152.

**பல்லாவரம் தொகுதி**
**27.12.2025**

1. 27.12.2025 சனிக்கிழமை காலை - 9.00 மணிக்கு பல்லாவரம் வடக்கு பகுதி - 15-வது வார்டு பாகம் எண்-143. 2. காலை - 10.30 மணிக்கு பல்லாவரம் வடக்கு பகுதி - 18 -வது வார்டு பாகம் எண்-306. 3. பகல் - 12.00 மணிக்கு செம்பாக்கம் வடக்கு பகுதி - 38 -வது வார்டு பாகம் எண்-232

1. 27.12.2025 சனிக்கிழமை மாலை - 4.00 மணிக்கு பம்மல் வடக்கு பகுதி - 3-வது வார்டு பாகம் எண்-24. 2. மாலை - 5.00 மணிக்கு பம்மல் தெற்கு பகுதி - 10 -வது வார்டு பாகம் எண்-322. 3. மாலை - 6.00 மணிக்கு பம்மல் தெற்கு பகுதி - 11 -வது வார்டு பாகம் எண்-327

**பல்லாவரம் தொகுதி**
**28.12.2025**

28.12.2025 ஞாயிற்றுக்கிழமை மாலை - 4.00 மணிக்கு பம்மல் தெற்கு பகுதி - 6-வது வார்டு பாகம் எண்-328. 2. மாலை - 5.00 மணிக்கு பம்மல் தெற்கு பகுதி - 6 -வது வார்டு பாகம் எண்-342.

மேற்கண்ட வாக்குச்சாவடிகளில் நடைபெறும் பூத் கமிட்டி கூட்டங்களில் அந்தந்த தொகுதிக்குட்பட்ட நாடாளுமன்ற - சட்டமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற தொகுதி பார்வையாளர்கள், ஒன்றிய - நகர - பகுதி - பேரூர் செயலாளர்கள், கழக அணிகளின் மாநில - மாவட்ட நிர்வாகிகள், தலைமை செயற்குழு - பொதுக்குழு உறுப்பினர்கள், வார்டு - கிளை செயலாளர்கள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் உறுப்பினர்கள், பாக பொறுப்பாளர்கள், BLA-2. BDA. BLC ஆகியோர் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் கூறியுள்ளார்.

## விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்க – சென்னை பள்ளிகளில் பயிலும்

# 6,236 மாணவ, மாணவிகளுக்கு ரூ.35.70 இலட்சம் ஊக்கத் தொகை!

## மேயர் பிரியா காசோலை வழங்கினார்!



சென்னை, டிச.25-

மேயர் நிதிநிலை அறிக்கை அறிவிப்பின்படி, மேயர் திருமதி ஆர். பிரியா அவர்கள், தேசிய, மாநில, மாவட்ட மற்றும் மண்டல அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொண்ட சென்னை பள்ளிகளில் பயிலும் 6,236 மாணவர்களுக்கு ஊக்கத்தொகையாக ரூ.35.70 இலட்சத்திற்கான காசோலைகளை வழங்குவதன் அடையாளமாக 21 மாணவ, மாணவியர்களுக்கு ஊக்கத்தொகைக்கான காசோலையினை நேற்று (24.12.2025) ரிப்பன் கட்டட வளாகக் கூட்டரங்கில் நடைபெற்ற நிகழ்ச்சியில் வழங்கினார்.

மேயர் அவர்களின் 2025-26ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை அறிவிப்பின்படி, சென்னை பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவிகள் தேசிய அளவில் விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்வதை ஊக்கப்படுத்தும் வகையில், அவர்களுக்கான பயணம் மற்றும் உணவிற்கான தொகை வழங்கி ஊக்கப்படுத்தப்படுகிறார்கள். அதன்படி, தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொண்ட 25 மாணவர்களுக்கு தலா ரூ.2500/- வீதம் ரூ.62,500/-க்கான காசோலையும், மாநில அளவில் கலந்து கொண்ட 24 மாணவர்களுக்கு தலா ரூ.1500/- வீதம் ரூ.36,000/-க்கான காசோலையும், மாவட்ட அளவில் கலந்து கொண்ட 755 மாணவர்களுக்கு தலா ரூ.1000/- வீதம் ரூ.7,55,000/-க்கான காசோலையும், மண்டல அளவில் கலந்து கொண்ட 5,432 மாணவர்களுக்கு தலா ரூ.500/- வீதம் ரூ.27,16,000/-க்கான காசோலை என மொத்தம் 6,236 மாணவர்களுக்கு ரூ.35,69,500/- மதிப்பில் ஊக்கத்தொகை வழங்கப்படுகிறது.

இந்நிகழ்வில் மேயர் பிரியா பேசியதாவது:

தமிழ்நாடு முதல்வர் அவர்கள் கல்விக்காக பல்வேறு திட்டங்களை சிறப்புடன் செயல்படுத்தி வருகிறார்கள். முதல்வர் அவர்களின் வழிகாட்டுதலின்படி பெருநகர சென்னை மாநகராட்சியின், சென்னை பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு பல்வேறு கல்வித் திட்டங்கள் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், பள்ளிகளுக்கான கட்டமைப்பும் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு மாணவ, மாணவிகள் நன்கு கல்வி பயில்வதற்கான சூழல் உருவாக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆட்சியில் தமிழ்நாடு விளையாட்டில் சிறந்த மாநிலமாக உருவாகியுள்ளது. தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் விளையாட்டுத் துறையில் பல்வேறு சாதனைகள் புரிந்து தமிழ்நாட்டில் இருந்து அதிக அளவில் விளையாட்டு வீரர்கள் உருவாகியுள்ளனர். இதனைப் பின்பற்றி சென்னை பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவிகள் தேசிய, மாநில, மாவட்ட, மண்டல அளவில் கலந்து கொண்டு சிறப்பான இடத்தை பெறுவதை ஊக்கப்படுத்தும் வகையில் அவர்களுக்கு பயணப்படி மற்றும் உணவுப்படியாக ஊக்கத் தொகை வழங்கப்படுகிறது. மாநகராட்சியின் மாணவ, மாணவிகள் இதன் காரணமாக அதிக அளவில் விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்பதற்கு நல்வாய்ப்பாக அமைந்துள்ளது. மாணவ, மாணவிகள் கல்வியிலும், விளையாட்டிலும் அரசின் திட்டங்களை நன்கு பயன்படுத்தி முன்னேறிட வேண்டும் என்று பேசினார்.

இந்நிகழ்ச்சியில், துணை மேயர் மு.மகேஷ்குமார், இணை ஆணையாளர் (கல்வி) திருமதி க. கற்பகம், நிலைக்குழுத் தலைவர் (கல்வி) திரு.த.விசுவநாதன், கல்வி அலுவலர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்டனர்.

## கள்ளக்குறிச்சி மாவட்டத்திற்கு 26–ஆம் தேதி வருகை தரும்

# முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு பிரம்மாண்ட வரவேற்பு!

## மாவட்டச் செயலாளர் தா.உதயசூரியன் எம்.எல்.ஏ. அறிக்கை!

கள்ளக்குறிச்சி, டிச. 25 -

கள்ளக்குறிச்சி மாவட்டத்திற்கு (டிசம்பர் 26ந் தேதி) வருகை தரும் தமிழக முதல்அமைச்சர், கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு மிக பிரம்மாண்டமான முறையில் வரவேற்பு அளிக்கப்படுகிறது என்று வடக்கு மாவட்டக் கழக செயலாளர் தா.உதயசூரியன் எம்.எல்.ஏ. தெரிவித்துள்ளார்.

கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்ட கழக செயலாளர் தா.உதயசூரியன் எம்.எல்.ஏ. அறிக்கையில் அவர் கூறியதாவது:

கள்ளக்குறிச்சியில் மாவட்ட கலெக்டர் அலுவலகம். புதிய புறநகர் பஸ் நிலையம் திறப்பு, உளுந்தூர்பேட்டை காலனி தொழிற்



சாலை பார்வையிடுதல், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருஉருவச் சிலை திறப்பு உள்ளிட்ட பல்வேறு அரசு நிகழ்ச்சிகளும் மாவட்டத்தின் பொறுப்பு அமைச்சர் எ.வ.வேலு முன்னிலையில் வருகிற 26ந்தேதி நடக்கிறது முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கலந்து கொள்ளும் இவ்விழா, வெகு விமரிசையாக நடைபெறுகிற வகையில் வடக்கு மாவட் டக் கழக நிர்வாகிகளையும், மாவட்ட அளவிலான அனைத்து நிலை பிரிவு அணி நிர்வாகிகளையும் தனித்தனியாக அழைத்து ஆலோசனை நடத்தியுள்ளேன்.

அதேபோல் முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு வழி நெடுகிலும் அந்தந்த பகுதியில் உள்ள நிர்வாகிகள் கழகத்தினர் பொது மக்களையும் அழைத்து வந்து வரவேற்பு அளிக்க உரிய ஏற்பாடுகள் செய்ய ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

இதில் மங்கல இசை, கரகாட்டம், மயிலாட்டம், ஒயிலாட்டம் உள்ளிட்ட 35 வகையான வரவேற்பு ஏற்பாடு களும் வழிநெடுக செய்யப் பட்டுள்ளது.

அதேபோல் அந்தந்த பகுதி கோவில் நிர்வாகம் சார்பில் பூரண கும்ப மரியாதை வழங்கும் வகையில் புனித கலசங்களுடன் முதல் அமைச்சரை வரவேற்கிறோம்.

மேலும் நலத்திட்ட உதவிகள் பெற வருகை தரும் சுமார் 70 ஆயிரம் பொது மக்களை விழா நடைபெறும் இடத்திற்கு பத்திரமாக அழைத்து வந்து திரும்ப அவர்களது சொந்த ஊருக்கே அனுப்பி வைக்கவும் போக்குவரத்து வசதி ஏற்பாடுகள் அந்தந்த துறை அதிகாரிகள் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.

## குன்றத்தூர் தெற்கு ஒன்றிய தி.மு.க.

# ஊராட்சி வாரியாக - இளைஞர் அணி, மாணவர் அணி நிர்வாகிகள் சந்திப்பு!

## ஒன்றியச் செயலாளர் படப்பை ஆ.மனோகரன் அறிவிப்பு!

காஞ்சிபுரம், டிச.25

குன்றத்தூர் தெற்கு ஒன்றியச் செயலாளர் படப்பை ஆ.மனோகரன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

குன்றத்தூர் தெற்கு ஒன்றிய தி.மு.க. இளைஞர் அணி, மாணவர் அணி நிர்வாகிகள் சந்திப்பு கூட்டம் ஊராட்சி வாரியாக எனது (படப்பை ஆ.மனோகரன்) தலைமையில், காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட செயலாளர் குறு சிறு நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா. மோ.அன்பரசன் ஆலோசனையின் படி இன்று 25.12.2025 வியாழக்கிழமை கீழ்க்கண்டவாறு நடைபெற உள்ளது.

எனவே இக்கூட்டத்தினை கிளை கழக செயலாளர்கள் இணைந்து ஊராட்சிக்கு ஒரு பகுதியில் இளைஞர் அணி - மாணவர் அணி கிளை நிர்வாகிகளை சந்திக்கும் வகையில் கூட்டத்தை ஏற்பாடு செய்திட வேணுமாய் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மலைப்பட்டு காலை 08.30 மணியளவிலும், சேத்துப்பட்டு காலை 08.45 மணியளவிலும், மணிமங்கலம் காலை 09.00 மணியளவிலும், கரசங்கால் காலை 09.30 மணியளவிலும், ஆதனூர் காலை 10.00 மணியளவிலும், மாடம்பாக்கம் காலை 10.30 மணியளவிலும், காவனூர் காலை 11.00 மணியளவிலும், ஒரத்தூர் நண்பகல் 11.30 மணியளவிலும், செரப்பணஞ்சேரி நண்பகல் 12.00 மணியளவிலும், வைப்பூர் நண்பகல் 12.30 மணியளவிலும், சாலமங்கலம் நண்பகல் 01.00 மணியளவிலும், வட்டம்பாக்கம் மாலை 03.30 மணியளவிலும், வளையக்கரணை மாலை 04.00 மணியளவிலும், நாட்டரசன்பட்டு மாலை 04.30 மணியளவிலும், வடக்குப்பட்டு மாலை 05.00 மணியளவிலும், எழிச்சூர் மாலை 05.30 மணியளவிலும், சென்னகுப்பம் மாலை 06.00 மணியளவிலும், படப்பை இரவு 07.00 மணியளவிலும் நடைபெறுகிறது.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



பால்வளத்துறை அமைச்சர் த.மனோ தங்கராஜ் தலைமையில் (23.12.2025) அன்று சென்னை, நந்தனம் ஆவின் அலுவலக கூட்டரங்கில் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் நலச்சங்க நிர்வாகிகளுடன் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இந்நிகழ்வில், பால்வளத்துறை ஆணையர் மற்றும் மேலாண்மை இயக்குநர் அ.ஜான் லூயிஸ், இணை மேலாண்மை இயக்குநர் திருமதி ச.கவிதா, பால் உற்பத்தியாளர்கள் நலச்சங்க நிர்வாகிகள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




குன்றத்தூர் மத்திய ஒன்றியம் நந்தம்பாக்கம் ஊராட்சியில் பாகம் 119–ல் என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச் சாவடி ஆலோசனைக் கூட்டத்தில் அமைச்சர் தா.மோ.அன்பரசன் சிறப்புரையாற்றினார். கூட்டத்தில் மாவட்ட ஊராட்சி குழு தலைவர் தெற்கு ஒன்றிய கழகச் செயலாளர் படப்பை ஆ.மனோகரன்,மத்திய ஒன்றிய கழக செயலாளர் ஏ. மணி,மா ஹரி மற்றும் மத்திய ஒன்றிய பொறுப்புக் குழு உறுப்பினர்கள். இளைஞர் அணி. மாணவர் அணி. அனைத்து அணிகள் நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.